மேற்குத் தொடர்ச்சி மலையின் சாரலிலே, இயற்கை எழிலும் ஆன்மீக ஒளியும் ஒருங்கே வீசும் திருத்தலம்; வீரமும் விளைச்சலும் விளைந்த நன்னிலம்; கல்வியிலும் வணிகத்திலும் சாதனை படைத்து வரும் தென்காசிச் சீமையின் மணிமகுடம்—நம் ஊர் சுரண்டையின் பெருமைகளைப் பாட, '**நம்ம சுரண்டையின் பெருமைகள்**' என்ற தலைப்பில் என் கவிமழையைத் தொடங்குகிறேன்

அழகுபார்வதி அம்மனுடன் முப்புடாதி தேரோடும் ஆன்மீகப் புகலிடம்,!

தென்காசிச் சீமையிலே பசுமை நெல்வயல்கள் சூழ்ந்த எழில்மிகு சோலை,!

மேற்குத் தொடர்ச்சிமலைச் சாரலோடு குற்றாலக் குளுமையும் வீசிடும் இயற்கைச் சிகரம்

வாரச்சந்தை கூடிடவே வணிகம் செழிக்கும் வரலாற்றுச் சந்தை,!

பேருந்து வசதிகளால் நாலாபுறமும் இணைந்திடும் சீர்மிகு நகரம், நகரத்து வளர்ச்சியின் கரம் நீட்டி, கிராமத்து வாழ்வாதாரம் காத்திடும் உன்னதப் பெட்டகம்

கற்பகப் பனையின் வளமும் பதநீர் வாரிவழங்கும் மரபார்ந்த வாழ்வாதாரக் பூமி

பள்ளியும் கல்லூரியும் தந்த கல்வி உறைவிடம்; சாதனையாளர்களைத் ஈன்ற சரித்திரத் தாயகம்; வீரர்களை ஈன்ற வியத்தகு பூமி; சான்றோர் விளைந்த நன்செய் நிலம்.

அனுதினமும் உயிர் காக்கும் அன்பான மருத்துவக் களம், நோய்போக்கி நலம் தரும் அற்புதக் குளம் நம்ம சுரண்டை.